முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**பூட்டு திறந்து ஜோதி தரிசனம் செய்து அமிழ்தம் உண்டு**
**அட்டமாசித்தி பெறுவது எப்போது?**
**மகான் பதஞ்சலியார் அருளிய அருட்சுவடி**

சுவடி வாசித்தளித்தவர் A.A.தரணிபாலன், தென்னூர், திருச்சி

17.09.2018, திங்கட்கிழமை

1. **அட்டமா சித்திக்கும் தலைவா போற்றி**
**அகிலத்தின் ஞானத்தின் குருவே போற்றி**
**எட்டிரண்டை அறிவித்த இறைவா போற்றி**
**எடுத்துரைப்பேன் பதஞ்சலி என் ஆசிதன்னை**

2. தனை உரைத்தேன் ஆறுமுக அரங்கனுக்கு
தவசித்தி காலத்தில் இருக்காய் அப்பா
நினைத்ததெல்லாம் கைகூட ஆசி உண்டு
நிர்மலமாய் தேகமும் இருப்பதாலே

3. இருப்பதனால் வெற்றிகளும் உனக்கு உண்டு
இக்காலம் சித்தாட அனுமதி இல்லை
உருவாகி உள்ளதொரு தேக வாட்டம்
உந்தனுக்கு சில இடர்கள் காட்டும் தானே

4. தானதவும் வேலவனின் கட்டளையாகும்
தவபூர்த்தி காலத்தில் இருப்பதாலே
ஆனதொரு மாற்றங்கள் நிகழ வைப்போம்
அகத்தியரும் அறுமுகனும் நேரில் தோன்றி

5. தோன்றிதான் அற்புதங்கள் செய்யப் போறார்
துன்பங்கள் நீக்கியே அருளளிப்பார்
தோன்றித் தோன்றி மறைகின்றார் உந்தன் முன்னே
தொடர்ந்து உனக்கு அருள் வழங்கி அற்புதம் செய்வார்

6. செய்யும்முன் அவத்தையெல்லாம் அனுபவித்து
சித்தத்துள் சிவகாட்சி காண்பாய் நீயும்
மெய் உனக்கு பொய் நீங்கி மெய்யாய் மாறும்
மேனிதனை இளமையாக்கி சித்தாட வைப்பார்

7. **வைப்பதற்கு புண்ணியத்தின் பலனும் உண்டு**
**(புண்ணியம் மிகதி ஆகஆக பல அற்புதங்கள் செய்யலாம். கோடிக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் செய்தல், ஆயிரக்கணக்கான திருமணங்கள் செய்து வைத்தல், கண் ஒளி வழங்குதல், குடிநீர் வழங்குதல் மற்றும் அநேகம் அநேகம் அறப்பணிகள் செய்யலாம். மேலும் உண்மை ஆன்மீகத்தை எடுத்துரைக்கலாம்.)**
வழுத்துகிறேன் வருகின்ற தைப் பூசத்தில்
செப்புகிறேன் சிவகாட்சி நீயும் பெற்று
சித்துக்கள் அட்டமும் கைகூடும் தான்

8. தானதற்கு வேலவரும் துணையிருப்பார்
தானுனக்கு முடக்கத்தை நீக்கி வைப்பார்
ஆனதொரு அகவல்தனை நித்தம் பாடி
அரங்கனும் செவி கேட்க வேண்டும் நன்றாய்

9. நன்றாக அகவல்தனை கேட்கும்போது
நாள்நாளும் அற்புதத்தை சிவமும் செய்வார்
அன்புடனே சிவஅருளும் தேகத்தை பெறுவாய்
அவத்தையெல்லாம் மாறுமப்பா உந்தனுக்கு

10. உந்தனுக்கு அமைதியும் வேண்டுமப்பா
உடல் உட்ணம் ஏறிஏறி இறங்குதப்பா
சந்திரகலை சில நேரம் ஓட்ட வேண்டும்
சமமாகும் தேக உட்ணம் அற்புதமாக

11. ஆக உந்தன் தேகமும் முடக்கம் நீங்கி
அட்டமா சித்துகளும் கைவரப் பெறுவாய்
வாகுடனே பதஞ்சலி என் வாக்கு சொன்னேன்
வையகமும் போற்றவே வாழ்வாய் முற்றே.

–சுபம்–